International Research Journal of Multidisciplinary Science & Technology
Volume: 01 Issue: 02 | May-2016 www.irjmrs.com ISSN : 2455-930X

# தமிழ் சிற்றிதழ்கள் - ஓர் ஆய்வுக் கட்டுரை

முனைவர் க. கலைச்செல்வி[1]

[1]துணை பேராசிரியர், தமிழ் துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருப்பத்தூர்

---

மேலைநாடுகளில், குறிப்பாக பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவில்தான் முதல் சிற்றிதழ்கள் உதயமாயின என்கிறது அறிக்கை அங்கே ஆரம்பகாலத்தில் அச்சிட்ட இதழ்களே குறைவாக இருந்தன . ரயிலில் செல்கையிலும் அரங்குகளில் காத்திருக்கையிலும் ஒரு இதழைவைத்து முகத்தை விசிறிக்கொள்வது சீமான்கள் மற்றும் சீமாட்டிகளின் கௌரவத்துக்கு உரிய விஷயமாக இருந்தது. [1]

வணிக இதழ்களின் செயல்பாட்டில் பிடித்தமில்லாத நிலையிலும் , ஒரு படைப்பாளன் தனது படைப்புகளைப் பத்திரிகைகளுக்கு அனுப்பி அவை வெளியிடப்படாமல் நிராகரிக்கப்படும் நிலையிலும் தனது கருத்துக்களை மாற்று வழியில் வெளிப்படுத்த விரும்பியவர்கள் கொண்டு வந்ததுதான் பெரும்பான்மையான சிற்றிதழ்கள். இந்தச் சிற்றிதழ்களின் பெயர்கள் கூட சற்று வித்தியாசமாக இருக்கும். சில சிற்றிதழ்களுக்கு ஓரெழுத்துத் தலைப்பாக 'அ', 'ஓ', 'ழ' என்று பெயரிடப்பட்டன. சில சிற்றிதழ்களுக்கு 'சுண்டெலி', 'வெட்டிப்பயல்', 'மாமியா' என்று நகைச்சுவையாகப் பெயர்கள் வைக்கப்பட்டது 'இலக்கிய வட்டம்', 'கசடதபற', 'சதங்கை', 'சூறாவளி' 'முத்தமிழ் முரசு' என்று சிறப்பான பெயர்கள் கூட சில சிற்றிதழ்களுக்கு வைக்கப்பட்டன.

குறுகிய வட்டத்துக்குள் குறைவான வாசகர்களைக் கொண்டு கையெழுத்துப் பிரதியாகவோ, குறைந்த அளவிலான அச்சுப்பிரதியாகவோ அந்த சிற்றிதழ் வெளிக்கொண்டு வருபவரது கருத்துக்களையும் , அவருடைய கருத்துக்களைச் சார்ந்துள்ள கருத்துக்களையும் அதிகமாகக் கொண்டு வெளியாகி வருவது என்கிற ஒரு வரையறைக்குள்தான் இந்த சிற்றிதழ்கள் இருக்கின்றன . இதனால் இந்த சிற்றிதழ்கள் அச்சிலும், படைப்பிலும் தரம் சற்று குறைவாகத்தான் இருக்கின்றன என்கிற கருத்து பரவலாக இருக்கிறது.

பெரிய இதழ்களில் கிடைக்காத நல்ல மதிப்பு மி க்க படைப்புகள் மட்டுமே இடம்பெறக் கூடிய ஒரு சில சிறப்பான சிற்றிதழ்களும் உண்டுஇந்த சிற்றிதழ்கள் தரம் மிக்க படைப்புகளை வெளியிட்டு இலக்கியச் சூழலில் ஒரு புதிய

மாற்றத்தைக் கூட கொண்டு வந்ததுஇதன் மூலம் சிற்றிதழ்களில் வெளியான பல படைப்புகள் மிகப்பெரும் பாராட்டுக்கும், விமர்சனத்துக்கும் கொண்டு வரப்பட்டன. இந்த சிற்றிதழ்களுக்காகத் தனியாக வாசகர்கள் உருவானதுடன் வாசகர் அமைப்புகளும் கூட துவங்கப்பட்டது. இந்த சிற்றிதழ்களில் அதிகமான இதழ்கள் வணிக நோக்கமின்றி வெளியிடப்படுவதாலும் , தரமில்லாதிருப்பதாலும் பொருளாதாரப் பற்றாக்குறை காரணமாகத் தொடர்ந்து வெளியிட முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றன. இதனால் இந்த சிற்றிதழ்கள் துவங்கப்பட்ட சில மாதங்களிலோ அல்லது சில ஆண்டுகளிலோ நிறுத்தப்பட்டு விடுகின்றன . சில இதழ்கள் மட்டும் தங்கள் வாழ்க்கையை நீடிக்கத் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கின்றன. இருப்பினும், “சிற்றிதழ் என்றாலே சிறந்த இதழ் என்றுதான் அர்த்தம். இதைத்தான் தற்போது சீரிதழ் என்றும் சொல்லி வருகிறார்கள். எனவே சிறந்த கருத்துக்களைச் சொல்லக்கூடிய எல்லா இதழ்களும் சிறந்த இதழ்கள்தான் இதில் சிறந்த இதழ் என்று பிரிக்க வேண்டிய அவசியமில்லை . எதிர்காலத்தில் தமிழ்ச் சூழலில் ஒரு மாற்றம் ஏற்பட வேண்டுமானால் அது சிற்றிதழ்களால் மட்டுமே நிகழும் என்பதை உறுதியாகச் சொல்லலாம் ” என்று சிற்றிதழ்களுக்கு நம்பிக்கையூட்டுகிறார் உலகத் தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கத்தின் தலைவர் கவிஞர் வதிலை பிரபா.



படம்:1 அக்கால சிற்றிதழ்களின் ஓர் பகுதி

சிற்றிதழ்களை பிரபலபடுத்த முதன் முறையாக ஆசிரியர் இலக்கியன், முத்தமிழ் முரசு திரு. மு.சுப.கருப்பையா பல புதிய வழிமுறைகளை பின்பற்றினார். முதன் முதலாக இணைய வழியில் தனது சிற்றிதழ்களை பிரபலபடுத்திய பெருமை இவரையே சாரும். அதுமட்டும்மல்லாது தனது இதழ்களின்

- ✓ அட்டையை பல விசித்திரமான படங்களை கொண்டு வெளியிடுவது,
- ✓ பல சித்த மருத்துவ குறிப்புகளை சில பத்தி போல் குறிப்பிடுவது,
- ✓ படம் பார்த்து கவிதை சொல்,
- ✓ நீங்களும் எழுதலாம்
- ✓ வடலூர் குரல் ஒலி ( ஆன்மீக செய்திகள்)
- ✓ தன்னம்பிக்கை வட்டம்
- ✓ தமிழ் அறிவோம் நண்பா
- ✓ தமிழால் நோய்களை விரட்டும் பகுதி
- ✓ கைப்பேசி
- ✓ தொழில் சிறப்பு இதழ்
- ✓ சிறப்பு இதழ்கள் ஒவ்வோரு விடுமுறைக்கும்
- ✓ தமிழ் நாட்காட்டி அறிவோம்
- ✓ நமக்கு வந்த நற்றமிழ் ஏடுகள்
  (எதிரி ஏடுகளையும் பற்றி வெளியிடும் இதழ்)
- ✓ தொலை நகல் ( Fax இயந்திரத்துக்கு தொலை நகல் என பெயர் வைத்தது இவரே)

என பல புதிய பகுதிகளை கொண்டு 1960 முதல் இன்று வரை நடத்தி வருகிறார். முத்தமிழ் முரசு - குமுகாய இலக்கிய மாத இதழ் ( குமுகாய என்றால் சமுதாய) என வாரம் வாரம் வெளிவரும் இதழ்.

International Research Journal of Multidisciplinary Science & Technology
Volume: 01 Issue: 02 | May-2016 www.irjmrs.com ISSN : 2455-930X

தமிழ்நாட்டுச் சிற்றிதழ்கள் சில

அ

- அபிநவ மகயாவதி (சிற்றிதழ்)
- அற விளக்கு (1972)
- அறிவுவழி (இதழ்)
- அஷ்ஷரீ அத்துல் இஸ்லாமியா

இ

- இனியநந்தவனம் (சிற்றிதழ்)
- இறை ஞானப் பூங்கா (சிற்றிதழ்)
- இவள் புதியவள் (சிற்றிதழ்)
- இஸ்லாமிய பிரசார நேசன் (சிற்றிதழ்)
- இஸ்லாமிய மித்திரன் (இதழ்)
- இஸ்லாம் (1923 சிற்றிதழ்)

உ

- உங்கள் நூலகம்
- உண்மை ஒளி (சிற்றிதழ்)
- உண்மை குரல் (சிற்றிதழ்)
- உண்மையின் முகவரி
- உத்தம மித்திரன் (இதழ்)
- உமர் கய்யாம் (சிற்றிதழ்)
- உம்மத் (இந்திய சிற்றிதழ்)
- உரிமைக் குரல் (இதழ்)
- உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம்

க

- கடலோசை (சிற்றிதழ்)
- கனியமுதம் (சிற்றிதழ்)
- கலாவல்லி (இதழ்)
- குவ்வத் (இதழ்)
- குவ்வத் (சிற்றிதழ்)
- கூவ்வத் (சிற்றிதழ்)

ச

- சமரசம் (1980 சிற்றிதழ்)
- சமாதான வழி (சிற்றிதழ்)
- சம்சுல் அக்பர் (சிற்றிதழ்)
- சம்சுல் ஈமான் (சிற்றிதழ்)
- சரீஅத் பேசுகிறது (சிற்றிதழ்)
- சிந்தனையாளன் (இதழ்)
- சிறு தொண்டன் (இதழ்)
- சுதந்திரம் (இதழ்)
- சுப வரம் (சிற்றிதழ்)
- செந்தமிழ் (இதழ்)
- செம்பிறை (1950 சிற்றிதழ்)
- சொல்புதிது
- சோலைவனம் (இதழ்)

ஜ

- ஜியா இ முர்து சாவியா (இதழ்)
- ஜோதிடச் சுடர் ஒளி (சிற்றிதழ்)

ஞ

- ஞானபாநு (இதழ்)

**த**

- தத்போதம் (சிற்றிதழ்)
- தமிழின ஓசை (இதழ்)
- திசை எட்டும் (இதழ்)
- திருப்புகழமிர்தம் (இதழ்)
- தீபம் (இதழ்)
- தெய்வச் சேக்கிழார் (சிற்றிதழ்)

**ந**

- நம் உரத்த சிந்தனை (சிற்றிதழ்)
- நம்ம ஊரு செய்தி (சிற்றிதழ்)
- நாம் (சிற்றிதழ்)
- நிகழ் (இதழ்)

**ப**

- பக்தி நாதம்
- பட்டுவளர்ச்சித்துறை பட்டுமலர்
- பனிக்குடம்
- பன்முகம்
- பித்தன் (இதழ்)
- புதிய மனிதன் (சிற்றிதழ்)
- பெந்தெகொஸ்தின் பேரொலி (சிற்றிதழ்)

**ம**

- மகளிர் சிந்தனை (சிற்றிதழ்)
- மகாகவி (சிற்றிதழ்)
- முத்தமிழ் முரசு

**ல**

- லிவாவுல் இஸ்லாம் (சிற்றிதழ்)

**வ**

- வானொலி உழவர் சங்க செய்திக் கதிர்
- வாய்ஸ் ஆப் மெட்ராஸ் (இதழ்)
- விசுவாமித்திரன் (சிற்றிதழ்)
- விநோத விசித்திர பத்திரிகை
- வெற்றிநடை (இதழ்)
- வெள்ளி மலர் (சிற்றிதழ்)

**ஹ**

- ஹிபாஜத்துல் இஸ்லாம் (சிற்றிதழ்)

1960 களில் பல சிற்றிதழ்கள் தங்களுக்கேன ஒர் தனிச்சிறப்பை பெற்றது அதில் சில-

தமிழ்ப்பணி' மாத இதழ் " என்னை நன்றாய் எந்தைப் படைத்தனன்அன்னைத் தமிழை அகிலம் உயர்த்தவே" என்பதை முழக்கமாகக் கொண்டு வெளிவந்து கொண்டிருக்கும் இவ்விதழ் , 1971 ஆம் ஆண்டு சித்திரை மாதம் ( ஏப்ரல்) முதல் இதழ் வெளிவந்தது. தொடர்ந்து 36 ஆண்டுகளாக இடைவிடாது வெளிவந்து சாதனை படைத்துக் கொண்டிருக்கிறது.இவ்விதழின் நிறுவனர் மற்றும் சிறப்பாசிரியர் பெருங்கவிக்கோ வா மு. சேதுராமன். ஆசிரியர் வா.மு.சே. திருவள்ளுவர். " உலக அரங்கில் தமிழுக்கும் தமிழருக்கும் ஓர் இடம் பெற்றுத் தருவதும், கலை இலக்கியப் பண்பாட்டுத் தளத்தில்

தமிழ்ப் பண்பாட்டை உயர்த்திப் பிடிப்பதும் தமிழ்ப்பணியின் நோக்கமாகும் என்கிறார் வா.மு.சே



1970 களில் நடந்த சிற்றிதழ்களின் கண்காட்சி

## முடிவுரை

சிற்றிதழ்கள் , அடிப்படைப் பிரச்சினைகளைப்பற்றி அவற்றால் நேரடியாகப் பாதிக்கப்படுபவர்கள் விவாதிக்காமல் தடுக்கும் தன்மை கொண்டவையாதலால் அவை சமூக அமைதிக்கு பெரும்பங்காற்றுகின்றன . பொதுவாக சிற்றிதழ்கள் வருவது நல்லது என்பதே ஆய்வின் கருத்தாகும். இன்று சரியான பொருளில் தமிழில் சிற்றிதழ்களின் தேவை இல்லை . இணையத்தின் வீச்சும் எளிமையும் சிற்றிதழ்களை பொருளற்றதாக்கிவிட்டன. நேற்று என்னென்ன காரணங்களுக்காக சிற்றிதழ்கள் ஆரம்பிக்கப்பட்டனவோ அவை எல்லாமே இணையத்தால் இல்லாமலாக்கப்பட்டுவிட்டன. சிற்றிதழ்களின் எழுத்துக்கள் கூட இணையம் வழியாகவே வாசிக்கப்படுகின்றன . தமிழ்ச்சிற்றிதழ்களின் காலகட்டம் என்பது எழுத்து முதல் நிகழ் வரையிலான நாற்பது வருடங்கள் மட்டுமே

1. http://www.jeyamohan.in/249
2. www.wikipedia.org
3. www.muthamilmurasu.co.cc